**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 3/2019**

PW1 – வினோத்குமார் த/பெ குஷல்சந்த் ஜெயின்
நாள்–20.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எங்கள் வீடு கட்டுவதற்கு முன்பே பிரதிவாதிகளின் வீடு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி வீட்டின் வடக்கு பக்கம் உள்ள வீட்டின் சந்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எங்கள் வீடு கட்டப்பட்டதற்கான நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கள் வீடு நகராட்சி கட்டிட அனுமதியின் பெயரில் தான் கட்டப்பட்டதா என்றால் நாங்கள் ஏற்கனவே கட்டிய வீடு தான் கிரயம் பெற்றோம் என்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதுநாள்வரையில் கட்டிட அனுமதி சம்பந்தமாக நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

நகராட்சி விதியின் படி ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இடையில் 5 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் வடபுற சந்திலிருந்து 5 அடி தள்ளி எங்கள் வீடு கட்டப்பட்டிருக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் கிரய முன்னோர்களும், எங்களின் கிரய முன்னோர்களும் 26.06.1955–ல் எவ்வித வசதி உரிமையும் கேட்பதில்லை எனவும், தற்சமயம் 3 சன்சைடு மட்டும் அமைத்துக்கொள்வதாகவும் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் கிரயம் பெற்ற ஆவணங்களில் 26.06.1955 ஆவணம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எங்களுக்கு எவ்வித வசதி உரிமையும் இல்லை என்பதால் தான் நாங்கள் பெற்ற கிரய ஆவணங்களில் அவ்வாறு குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. கிரய முன்னோர்களே எங்கள் வீட்டில் இருந்த சன்சைடுகளை அப்புறப்படுத்திவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. எங்களுக்கு வசதி உரிமை கோர எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை சரியாகத்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.